செய்தி வெளியீடு எண். 131 நாள்: 07.03.2018

# திருவள்ளூரில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான சிறப்பு முகாம் 09.03.2018 அன்று நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளுர் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு / மாவட்ட தொழிலாளர் நலத்துறை மற்றும் இதர அரசு துறைகள் இணைந்து நடத்தும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பு முகாம், 08.03.2018 அன்று காலை 10 மணி முதல் திருவள்ளுர்-திருத்தணி நெடுஞ்சாலை, திருவள்ளுர், திருப்பாச்சூர், ஏ.கே.என். மகாலில் நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. தற்போது நிர்வாக காரணங்களுக்காக மேற்படி சிறப்பு முகாமானது 09.03.2018 அன்று காலை 10 மணி முதல் திருவள்ளுர்-திருத்தணி நெடுஞ்சாலை, திருவள்ளுர், திருப்பாச்சூர், ஏ.கே.என். மகாலில் நடைபெறும் என திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**